Before the Court of Chief Judicial Magistrate - cum Special Judge, Kanyakumari District

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348006

1. District : Kanyakumari PS: VADAC Year: 2025 FIR No 06/2025 Date: 28.05.2025
மாவட்டம் காவல்நிலையம் Kanyakumari. ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 26.05.2025 நாள் வரை 18.00 hrs.

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 08.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.05.2025 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஆறுநூர் பேரூராட்சி அலுவலகம் சுமார் 28 km வடமேற்கு.

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name : சுரேஷ் குமார்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சுபின் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 10.05.2000 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 16/89-C, மணலி தரை வீடு, ரேற்றக்கோடு
தொழில் முகவரி பெரியநாயகி அருகில், திருவட்டார் வட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) கன்னியாகுமரி மாவட்
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. முருகன், பில் கலெக்டர், ஆற்றூர் பேரூராட்சி அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed தலைமைக் காவலர் ஆகாஷ் பாஸ்கரன் to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/05/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
28/05/2025

15. Date & Time of despatch to the court: 28-05-2025 10.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. சிவசங்கரி,
Rank: நிலை காவல் அலுவலர், No. எண்
உ.தி.க. துறை,
கண்ணமங்கலம் பிரிவு.

Attachment to column No-12 of FIR in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.06/2025

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:- இன்று 28.05.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு காவல் ஆய்வாளர் C.சிவசங்கரி ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம், வீயன்னூர் அஞ்சல், ஏற்றக்கோடு மணலிதரைவிளை கதவு எண் 16/89-C என்ற முகவரியில் வசித்து வரும் சுரேஷ்குமார் மகன் திரு. S.சுபின் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு குற்ற எண் 06/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 28.05.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் S.சுபின் வயது 25, த/பெ சுரேஷ்குமார், 16/89-C மணலிதரைவிளை, ஏற்றக்கோடு, வீயன்னூர் அஞ்சல், திருவட்டார் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். ஐயா, நான் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டம், ஏற்றக்கோடு, மணலிதரைவிளை, என்னும் ஊரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் மார்தாண்டத்தில் உள்ள ITRobes எனும் IT Startup company -ல் web developer ஆக வேலை செய்து வருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டம் ஏற்றக்கோடு கிராமம், புல எண்.316/4A -ல் உள்ள சுமார் 11.5 சென்ட் மனையினை எனது குடும்பத்தார் வேர்கிளம்பி சார்பதிவாளர் ஆவண எண் 1570/2023 படி எனது பெயருக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள். நான் மேற்குறிப்பிட்ட மனையில் வீடு கட்டுவதற்கு எங்கள் ஊர் அருகே வசிக்கும் திரு.ஜின்சன் என்ற பொறியாளரிடம் எனது பெயரில் உள்ள சொத்து பத்திரம், பட்டா, அடங்கல், வில்லங்க சான்று ஆகியவற்றின் நகல்களை கொடுத்து சுமார் 1300 சதுர அடி அளவில் வரைபடம் மற்றும் மதிப்பீடு தயார் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதன்படி அவர் திருவட்டாரை சேர்ந்த உரிமம் பெற்ற வரைபட சர்வேயர் திரு.வில்லியம்ஸ் என்பவர் மூலம் மேற்படி வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்து கையொப்பம் பெற்று 26.05.2025 அன்று காலை இணையதளம் மூலம் ஆற்றூர் பேரூராட்சிக்கு விண்ணப்பம் செய்தார். பின்னர் நான் விண்ணப்பித்திருந்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களுடன் 26.05.2025 ஆம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு ஆற்றூர் பேரூராட்சி அலுவலகம் சென்று அங்கு பில் கலெக்டராக பணிபுரியும் திரு.முருகன் என்பவரை சந்தித்து இணையதளம் மூலம் விண்ணப்பித்த விவரத்தை தெரிவித்தேன். அவரும் , எனது விண்ணப்பம் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் வீடு கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் வேண்டி விண்ணப்பித்த இடத்தினை பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். உடனே அவரை எனது இருசக்கர வாகனத்தில் கூட்டிக்கொண்டு வந்து மேற்படி இடத்தினை காண்பித்து விட்டு மறுபடியும் ஆற்றூர் பேரூராட்சி அலுவலகத்தில் அன்றைய தினம் மாலை சுமார் 18.00 மணிக்கு இறக்கிவிட்ட பின்னால் நான் வீடு கட்டுவதற்கு எப்பொழுது பிளான் அப்ரூவல் கிடைக்கும் என்று முருகனிடம் கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் வீடு கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் கிடைக்க தான் ஏற்பாடு செய்வதாகவும் அதற்கு தனக்கு ரூ.5000/- தரவேண்டும் எனவும் கூறினார். நான் முருகனிடம் எனது விண்ணப்பம் தொடர்பாக ஆற்றூர் பேரூராட்சி செயல் அலுவலரை பார்க்க வேண்டும் என்று கேட்டபோது நீங்கள் அவரையெல்லாம் பார்க்க முடியாது. நீங்கள் எனக்கு ரூ.5000/- தந்தால் மட்டுமே நீங்கள் வீடு கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கறாராக கூறிவிட்டார். அப்போது அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்த போது எனக்கு லஞ்சம் கொடுத்து நான் கட்டப்போகும் வீட்டிற்கு பிளான் அப்ரூவல் பெற விருப்பம் இல்லை. எனது அலுவலகத்தில் அவசர வேலை இருந்தபடியால் என்னிடம் வீடு கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் கிடைக்க ஏற்பாடு செய்ய ரூ.5000 லஞ்சமாக கேட்ட

திரு.முருகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு இன்று இந்த புகார் மனுவினை அளிக்கிறேன். மேலும் திரு.முருகன் என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூ.5000 பணத்தினை அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நான் செலவுக்காக வைத்த தொகையிலிருந்து கொண்டு வந்துள்ளேன். ஆற்றூர் பேரூராட்சி பில் கலெக்டர் திரு.முருகன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd 28/05/2025 Sir, received the complaint on 28.05.2025 at 08.00 hrs. Genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of Regular case is warranted. The matter is intimated to the SP/SR, V & AC, Chennai and registered a case in Kanyakumari V&AC Cr.No.06/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 28.05.2025 at 10.00 hrs and took up for investigation. Sd.28/05/2025 (C.சிவசங்கரி) காவல் ஆய்வாளர், ஊ.த.க.துறை கன்னியாகுமரி பிரிவு.

இந்த அசல் முதல் தகவலறிக்கையை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தன் நீதிபதி கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்

28/5/2025

C.சிவசங்கரி,
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. துறை,
கன்னியாகுமரி பிரிவு.